பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 23 | செவ்வாய்க்கிழமை | 06.02.2024 | கதிர் 91

# ஜே.வி.பி. கட்சித் தலைவரை அழைத்து பேசியது இந்தியா

## புதுடில்லியில் ஜெய்சங்கருடன் சந்திப்பு



**இந்தியாவின் அழைப்பை ஏற்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இந்தியா சென்றுள்ளனர். புதுடில்லியில் இந்திய அயலுற** ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகனுமான நாமலுக்கும் இடையில் ஒரு இரகசியச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கொழும்பு, பேஜெட் வீதியிலுள்ள ரணிலின் வீட்டில் இந்தச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பன தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக தேர்தல்களுக்கு முன்பாக பெதுஜன பெரமுன கட்சியை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது தொடர்பில் நாமலுடன் ஜனாதிபதி பேசியுள்ளார் என்று தெரிகின்றது.

பெரமுன கட்சியை நாமல் முன்வது பொறுப்பெடுக்கவேண்டிய தருணம் இது என்றவகையில் ☞ 2

## செல்வம் எம்.பியின் தயார் காலமானார்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் தாயாரான அமிர்தநாதன் செபமாலை இன்று தனது 84 ஆவது வயதில் காலமானார்.

1940ஆம் ஆண்டு மன்னார் விடத்தல் தீவில் பிறந்த அமிர்தநாதன் செபமாலை, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை ☞ 2

## ஏற்றுமதிக்காக கஞ்சா பயிரிட அமைச்சரவை அனுமதி

ஏற்றுமதி நோக்கத்திற்காகக் கஞ்சாசெடியை பயிரிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனாகமகே தெரிவித்தார்.

தன்னால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு அங்கீகாரம் கிடைத்துள்ளமை தனக்கு மிகவும் மகிழ்ச்சி தருவதாகவும் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குறிப்பிட்டார்.

## கெஹலியவை பதவி நீக்கக் கோரி கொழும்பில் கையெழுத்து வேட்டை

அமைச்சர் பதவியிலிருந்து கெஹலிய ரம்புக்வெல நீக்கப்பட வேண்டுமென என்று கொழும்பில் கையெழுத்துசேகரிப்புத் தொடங்கப்பட்டுள்ளது.

கோட்டைதொடருந்து நிலையத்துக்கு முன்பாக, தேசியசிவில் முன்னணி மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்ததாவது:

அமைச்சர் கெஹலியவுக்கு எதிராக ஊழல் மோசடிகள் குற்றச்சாட்டுக்கு அப்பால் இனப்படுகொலையில் ஈடுபட்டார் என்ற அடிப்படையில்தான் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வேறுநாடுகளில் ஏற்பட்டிருப்பின் விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் உடனடியாகப் பதவி விலகி இருப்பார். அல்லது விலக்கப்பட்டிருப்பார்.

இலங்கையில் அமைச்சர் ஒருவர் எந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகினாலும், சிறைக்குச் சென்றாலும்கூட பதவி விலகமாட்டார்.

இவ்வாறானவர்களை கட்டாயப்படுத்தியேனும் வெளியேற்றவேண்டும். அவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுத்தால் மாத்திரமே இலங்கையின் அரசியல் சரியான நிலைமைக்கு வரும் என்றார்.

## எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா பேச்சு



நிகழ்நிலைக் காப்புச் சட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவின் இலங்கைக்கான புதிய உயர்ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள மூத்த இராஜதந்திரியான சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட கால ☞ 2

### அரச வைத்தியசாலைகளில்

## பார்வையை இழந்தோருக்கு இழப்பீடு வழங்கவேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா வலியுறுத்து

அரச வைத்தியசாலைகளில் வழங்கப்பட்ட மருந்துகளின் பாதிப்பால் தமது பார்வையை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும். இல்லையேல் இழப்பீடு கேட்டு உயர் நீதிமன்றத்தை நாடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கட்புரை சிகிச்சைக்கு உள்ளாகி பாதிப்படைந்தவர்களை சந்தித்து உரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே ☞ 2

## சாந்தனை அழைத்து வர ஜனாதிபதி ரணில் ஏற்பாடு

முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை தொடர்பில் தண்டனை பெற்று விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சம்மதம் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் ஆகியோருடன் தான் கலந்துரையாடியபோது சாந்தனை அழைத்து வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க சம்மதம் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக சாந்தனின் தாய் மற்றும் சகோதரர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ☞ 2

## ஜப்பான், தென்கொரியாவுக்குப் பின் இலங்கையர்களுக்கே காணி உரித்து

### பெருமிதப்படுகிறார் ஜனாதிபதி

ஜப்பான் மற்றும் தென்கொரிய நாட்டவர்களுக்கு அடுத்து ஆசியாவிலேயே இலங்கையர்களுக்கு மட்டுமே காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உரித்து (உருமய) திட்டத்தின் முதற்கட்டமாக 10,000 விவசாயிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் ரங்கிரி தம்புலு விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது எனது நாடு, நான் பிறந்த நாடு, எனது பாரம்பரியத்தை உறுதிப்படுத்திய நாடு. இந்நாட்டு மக்கள் தமது காணி உரிமையைப் பெறுவதற்காக நடத்திய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இன்று நாம் இங்கு கூடியுள்ளோம். இன்று நாம் ஒரு புரட்சிகர சந்தர்ப்பத்தில் பங்கேற்கிறோம்.

20 இலட்சம் காணி உரிமைகள் இன்று வழங்கப்படுகின்றன. இந்த புரட்சியை நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்தநிலம் உரிமை பெறும்போது, யாருக்கும் அடிபணிய வேண்டியதில்லை. எம்.பி, அதிகாரிகள் பின்னால் சென்று அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. நிலத்தை விரும்பியபடி அபிவிருத்தி செய்யலாம், அதில் யாரும் அழுத்தம் கொடுக்க முடியாது.

தங்களுக்குக் கிடைத்த இந்த உரிமையை ☞ 2

### நிகழ்நிலை காப்புச் சட்டத்தில்

## உயர் நீதிமன்ற பரிந்துரை புறக்கணிக்கப்பட்டதற்கு ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் அமைப்பு எதிர்ப்பு

உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த பல திருத்தங்களை கவனத்திற்கொள்ளாமல் நிகழ்நிலை காப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ட்ரான்பெரன்சி இன்டர் நஷனல் நிறுவனம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் அரசமைப்பிற்கு முரணாக ஏதேனும் சட்டமொன்றை கொண்டுவருவதற்கு நாடாளுமன்றம் முயற்சிக்கும்போது அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதற்கு பிரஜைகளுக்கு அரசமைப்பின் ஊடாகவழங்கப்பட்டுள்ள உரிமை இதன்மூலம் பாரதூரமாக மீறப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் ஒருபோதும் இல்லாதவாறு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியுள்ளதை கண்டிக்கின்றோம். உடனடியாக சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இது ஆளும் தரப்பு, நாடாளுமன்றம், சட்டமா அதிபர், சபாநாயகர் ஆகிய தரப்பினரின் சட்டத்திற்கு முரணான செயற்பாடாகும் - என்றுள்ளது.

## இனி இது .....

ரணில் ஆலோசனை வழங்கினார் என்றும் அறிய முடிந்தது. இந்தச் சந்திப்பின் நோக்கம் என்ன என்பதை உய்தறிய முடியவில்லை என்று நாமலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ரணில் பேசினாலும் தான் அதில் போட்டியிடப் போகிறார் என்றோ பெரமுனவின் ஆதரவு தனக்குத் தேவை என்றோ அவர் எதுவும் கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மொட்டுக்கட்சிக்குள் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் ஆளும் தரப்புக்கும் மொட்டுக் கட்சிக்கும் இடையிலான பிரச்சினைகள் தொடர்பிலேயே நாமல் இந்தக் கலந்துரையாடலில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளார். இருந்தாலும் இந்தச் சந்திப்பின் பின்னர் நாமல் மொட்டுக்கட்சியை மறுசீரமைக்கும் பணிகளைக் கையில் எடுத்துள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் அமெரிக்காவில் தங்கியிருப்பது மற்றும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தம்மிக்க பெரேரா தற்காலிகமாக அதிலிருந்து விலகியமை என்பன மொட்டுக் கட்சிக்குள் ஒருவித சோர்வை ஏற்படுத்தியுள்ளன. சோர்வைக் களைந்து கட்சிக்குப் புதிய உற்சாகத்தை ஊட்டும் வகையில் நாமல் கடந்த வாரம் 'தசபல சேனா' என்ற பெயரில் கட்சியை மீண்டும் கிராமத்திற்குக் கொண்டுவரும் திட்டத்தைத் தொடங்கினார். தனது தந்தை மஹிந்தவின் ஆசியுடன் அவர் இதனைத் தொடங்கியுள்ளார்.

அதேவேளை, பொஹொட்டுவவிற்குள் நடக்கும் உள்ளக விவாதங்களில், நாட்டில் இன்னும் 25% வாக்குகள் மகிந்தவிடம் இருப்பதாகவும், தேர்தலில் மகிந்தவின் ஆதரவை இன்னொரு ராஜபக்சவுக்கு மடைமாற்றலாமே தவிர வேறு யாருக்கும் திருப்ப முடியாது என்று பலர் வாதிட்டுள்ளனர். அவர்களின் கருத்துப்படி நாமல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதே புத்திசாலித்தனம். நாமலின் கருத்தும் அதுவே என கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. அத்துடன், மொட்டில் இருந்து பிரிந்த நிமல் லான்சாவுக்கும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட கூட்டணிகளோடு சேர்ந்து பெரமுன தேர்தல்களைச் சந்திக்கக்கூடாது என்றும் நாமல் நினைக்கிறார். ஆனால், இப்போதிருக்கும் அரசியல் சூழ் நிலைகளில் நாமலைக் களமிறக்கி அவரது எதிர்காலத்தைப் பாழ்படுத்திவிடக்கூடாது என்பதில் மகிந்த அதிகம் கரிசனை காட்டுகின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த வாரம் வியாழக்கிழமை ஜனாதிபதி கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெரமுனவினரும் சீறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் நிமல் லான்சா அணியினரும் அழைக்கப்பட்டிருந்தனர். நமலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் அதில் கலந்து கொள்ளவில்லை.

இந்தக் கலந்துரையாடலைத் தொடங்கிய ஜனாதிபதி, தேர்தல் ஒன்று வரவிருப்பதாகவும் அதற்குத் தயாராகுமாறும் குழுவிற்கு அறிவித்தார். ஜனாதிபதி தனது உரையை முடித்ததும், கலந்துரையாடலில் கலந்துகொண்ட மொட்டுக் கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் ரணிலின் உரைக்கு எதிர்வினையாற்றியிருந்தார்.

''இப்படிப் பேசத்தான் எங்களைக் கூப்பிட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. நீங்கள் உத்தியோகபூர்வமாக பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் பற்றிப் பேசினால், முதலில் ஆட்சியில் பங்காளியாக உள்ள பிரதான கட்சியுடன் உத்தியோகபூர்வமாகக் கலந்துரையாடவேண்டும். பெரமுனவின் தலைவர்களான மகிந்த மற்றும் பஸில் ராஜபக்சக்களுடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதைவிடுத்து ஏனையவர்களுடன் இது பற்றிப் பேசிப் பயனில்லை'' என்றார்.

சாகர இப்படிக் கூறியதும் அவசரமாக இடைமறித்த ரணில், மஹிந்த மற்றும் பஸிலுடன் எதிர்காலத்தில் இது பற்றி விரிவாகப் பேசப்படும் என்று கூறிக் கலந்துரையாடலை முடித்துக்கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளர் ரணில்தான் என்று சொல்லிவந்தாலும் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதில் ரணில் இன்னும் தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்றே தெரிகின்றது. தனக்குச் சாதகமான சூழல் ஏதாவது இருக்கின்றதா என்பதை அவர் தொடர்ந்து நாடி பிடித்துப் பார்த்து வருகின்றார். ஏதாவது ஒரு வழியாவது கிடைத்துவிடாதா என்று கூர்ந்து தேடி வருகிறார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை அவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஜே.வி.பி. குழுவில் அதன் செயலாளர் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் அணில் ஜயந்த ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்த குறித்த குழுவினர் அதனையடுத்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலையும் சந்தித்து உரையாடினர்.

இருதரப்பு உறவுகளை விரிவாக்கும் நோக்குடன் அநுரகுமார திஸாநாயக்கவுடன் சிறந்த கலந்துரையாடல் ஒருமணிநேரமாக இடம்பெற்றதாக, வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

''இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடினோம். அயல்நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கைகள், சாகர் கொள்கைகள் இந்தியா எப்போதும் இலங்கையின் நம்பகத் தன்மையுடைய நண்பராக செயற்படுவது என்பன தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசர் அஜித் டோவலுடனான சந்திப்பின்போது இந்தியா, இலங்கைக்கு இடையிலான பிராந்திய பாதுகாப்பு இருதரப்பு உறவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பார்வையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச மருத்துவமனைகளில் வழங்கப்பட்ட மருந்துகள் காரணமாக பலர் தமது பார்வையை இழந்துள்ளனர். இவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

ஆகவே, அவர்களுக்கான இழப்பீட்டை வழங்கும் நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் நாம் உயர் நீதிமன்றத்தினை அடுத்தகட்டமாக நாடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## செல்வம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மன்னார் தோட்டவெளி கிராமத்திலுள்ள வீட்டில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரது இறுதி கிரிகைகள் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதுடன் விடத்தல் தீவு - சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

## சாந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து சாந்தனை இலங்கைக்கு அழைத்துவருவதற்கு ஆவன செய்து தரும்படி கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் சாந்தன் சிறப்புத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது உடல் நிலை மோசமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அவரை அழைத்து வந்து இறுதிக் காலத்தில் தன்னோடு வைத்துக்கொள்வதற்கு விரும்புகிறார் என்று அவரது தாயார் நீண்டகாலமாக உருக்கமான வேண்டுகோளை முன்வைத்து வருகின்றார்.

சாந்தனுக்கு கடவுச் சீட்டு உள்ளிட்ட ஆவணங்கள் எவையும் இல்லாத காரணத்தால் அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடியாத நிலை இருப்பதாக இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அவருக்குத் தற்காலிகக் கடவுச்சீட்டு வழங்கினால் மட்-டுமே சாந்தனை திருப்பி அனுப்ப முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சாந்தனுக்குத் தற்காலிக கடவுச் சீட்டு வழங்குவதற்கு இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகக் காத்திருப்பதாக தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நிலவிவரும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்களுடன் தொடர்பான பல்வேறு விடயங்களை இருவரும் பரிமாறிக்கொண்டனர்.

தற்போதைய அரசு கொண்டு வந்துள்ள சட்டவிரோத மற்றும் நியாயமற்ற வரிக் கொள்கை குறித்த விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்திய உயர்ஆணையருக்குத் தெரியப்படுத்தினார்.

நியாயமற்ற முறையில் ஆட்சியாளர்கள் விதித்த பெறுமதி சேர் வரியினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களின் ஊழியர் சேம நிதியங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதகமான விளைவுகளின் தாக்கம் என்பன குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது உயர்ஆணையருக்குத் தெளிவுபடுத்தினார்.

அவ்வாறே, தற்போதைய ஆட்சியாளர்கள் மக்களின் ஜனநாயக உரிமைகளில் ஏற்படுத்தி வரும் தாக்கம் குறித்து விடயங்களையும் இந்திய உயர்ஆணையரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திட்டமிட்ட திகதிகளில் நடத்தப்படவேண்டிய தேர்தல்கள் வேண்டுமென்றே ஒத்திவைக்கப்பட்டு வருவதான விடயங்கள் குறித்தும் இங்கு எதிர்க்கட்சித் தலைவரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதுதவிர இந்த வருடம் தேர்தல் வருடமாக அமைந்திருந்தாலும் தற்போதைய ஆட்சியாளர்கள் 'நிகழ்நிலை காப்பு' என்ற சட்டத்தை நிறைவேற்றி மக்களின் கருத்துகளை தெரிவிக்கும் உரிமை, தகவல் அறியும் உரிமை என்பவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும், சமூக ஊடக வலையமைப்புகளை முடக்க, கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்த இச்சட்டத்தினால் முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் வருடத்தில் இவ்வாறான சட்டமூலத்தை கொண்டுவருவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளில் தேவையற்ற தலையீடுகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

இச்சந்திப்பில் இந்திய பிரதி உயர்ஆணையர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு பிரதானி சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஜப்பான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த உரிமை தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும். இதை நீங்கள் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகில் நில உரிமை கோரி பல புரட்சிகள் நடந்துள்ளன. இன்று இந்த நாட்டில் எந்தப் புரட்சியும் இன்றி மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இது சாத்தியமற்றது என்று பலர் நினைத்தார்கள். ஆனால் எங்கள் அரசாங்கம் அந்த முடிவை எடுத்தது. குறிப்பாக விவசாயம் செய்தவர்கள், வீடு கட்டியவர்கள் என அனைவருக்கும் அந்த நிலத்தில் உரிமை இருக்கும். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு கடந்த பெரும் போகத்திலும், சிறு போகத்திலும் உங்களிடமிருந்து கிடைத்த ஆதரவை மறக்க முடியாது. அறுவடை வெற்றிகரமாக அமைந்திருந்தது. அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றது. மேலும் இந்த நிலங்களில் வீடுகள் கட்டியவர்களும் உள்ளனர். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிரந்தர காணி உரிமையை வழங்குவதன் ஊடாக இந்த மக்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது ஒரு வரலாற்று முக்கியத்துவமான தருணமாகும். சிங்கள மன்னராட்சிக் காலத்தில் கூட காணி உறுதிப் பத்திர முறை இருக்கவில்லை. பிரபுக்களுக்கும் நிலச்சுவாந்தர்களுக்கும் பத்திரம் ஊடாக காணி வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு விவாசாயத்திற்காக நிலம் வழங்கப்பட்டது. மக்களுக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரங்கள் இருக்கவில்லை. தரிசு நிலச் சட்டத்தின் கீழ் இவை அனைத்தும் அரசுக்குச் சொந்தமானது. சில நிலங்கள் வெள்ளைக்காரர்களுக்கு தோட்டங்களுக்காக வழங்கப்பட்டது. மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் டி.எஸ்.சேனாநாயக்க 1935 ஆம் ஆண்டு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மூலம் மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுத்தார். நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் மூலம் கிராமங்களை விரிவுபடுத்த நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த நிலம் யாருக்கும் சொந்தமில்லை.

அதன் பிறகு, மக்கள் வறண்ட பகுதிகளில் குடியேறினர். அதனுடன் நெற் பயிர்செய்கை ஆரம்பமானது. பிலிப் குணவர்தன நெல் அதிகளவில் இருந்த ஈர வலயத்தில் நெல்களை அபிவிருத்தி செய்வதற்காக நெல் சட்டத்தை கொண்டு வந்தார். அப்போதும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆனால் அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

ஜே.ஆர் ஜயவர்தன மகாவலி திட்டத்தில் இருந்து அதிக இலட்சம் ஏக்கர்களை மக்களுக்கு வழங்கினார். இப்போது நாம் இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். கடந்த காலத்தில் கயந்த கருணாதிலக்க இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் போது புதிய சட்டத்தை கொண்டு வருவதாக கூறி அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. ஆனால் இம்முறை புதிய ச ட்டங்கள் குறித்து கவனிக்கப்படவில்லை. அரசாங்க காணி கட்டளைச் சட்டம் வெள்ளைக்காரர்களுக்கு காணிகளை வழங்கியிருந்தால், முதலீட்டாளர்களுக்கு இலவச காணி உரிமை வழங்கப்பட்டிருந்தால், அதே உரிமையை ஏன் மக்களுக்கு வழங்க முடியாது?

முதலீட்டாளர்களுக்கு நிலம் வழங்க பயன்படுத்தப்பட்ட சட்டவிதிகளின் மூலம் இன்று உங்கள் அனைவருக்கும் காணி உரிமையை வழங்குகிறோம். மீண்டும் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த திட்டம் வரலாற்று சிறப்புமிக்கது. புரட்சிகரமானது. ஜப்பான் மற்றும் தென் கொரியா மாத்திரமே ஆசியாவில் காணி உரிமையை வழங்கியுள்ளன. இன்று நம் நாட்டு மக்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியை உடனடியாக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளேன். அதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி ஒன்று சேருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றிருக்கும் அரசாங்கமானது இலங்கையில் முன்னெப்போதும் இல்லாதது என்றே கூற வேண்டும். கடினமான காலங்களில் பொறுப்பேற்கக்கூடிய அனைவரும் அதனுடன் இணைந்துள்ளனர். இதில் பல்வேறு கட்சியினர் கலந்து கொண்டனர். நாங்கள் ஒரு பகுதியினருடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்தோம். ஒவ்வொரு கட்சியிலும் ஒரு பகுதி பிரிந்து மற்ற கட்சிகளுக்குச் சென்றது. இவ்வாறான அரசாங்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை நாம் எதிர்கொண்டோம்.

நமது நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருகிறது. இந்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் சிலர் கஷ்டப்படுகிறார்கள். எம்மால் முடிந்தளவு இந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கினோம். அதற்காக அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தினோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்தோம். வங்குரோத்து நிலையில் இருந்து இப்போதுதான் மீண்டு வருகின்றோம்.

மூன்றாவது கட்டமாக இந்த நிரந்தர காணி உரிமைகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றால், நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றதன் பின்னர் எதிர்காலத்தில் என்ன செய்ய முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

நாம் ஆரம்பித்த இந்தப் பயணத்தைத் தொடர்ந்தால், 2025 ஆம் ஆண்டில் 5% பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது. நாட்டை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைந்தோம். நாங்கள் அங்கு கட்சி அரசியலில் ஈடுபடவில்லை. அப்படி செயற்பட்டிருந்திருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்காது. இந்தப் பணியை முன்னெடுப்பதில் அனைவரும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம்மைப் பற்றி நாம் சிந்திக்கக் கூடாது. நாட்டு மக்களின் எதிர்காலம் பற்றியே சிந்திக்க வேண்டும். நாட்டின் 20 இலட்சம் மக்களுக்கு நாம் அனைவரும் இணைந்து காணி உரிமையை வழங்கியுள்ளோம். மேலும் 20 இலட்சம் பேருக்கு அஸ்வெசும நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 15 இலட்சம் பேருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சியடைந்து வருமான வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வளவு பாரிய பணியை பாராளுமன்றத்தில் ஒரு குழுவால் செய்ய முடியும் என்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் என்ன செய்ய முடியாது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். நாம் அந்த வழியில் செல்ல வேண்டும்.

எதிர்காலத்தில் இந்த நாட்டை அபிவிருத்திசெய்ய மேலும் பலசட்டங்களை கொண்டு வர எதிர்பார்க்கின்றோம். அனைவரும் இணைந்து முன்னேறுவோம். விவசாயத்தை நவீனமயமாக்குவதன் மூலம் நாட்டில் மிகப்பெரிய விவசாய புரட்சி ஏற்பட்டு வருகிறது.

நாம் மீண்டும் கடன் வாங்க முடியாது. நாம் மீண்டும் பிச்சைக்காரர்களின் தேசமாக மாற முடியாது. நமது பெருமையை நாம் பாதுகாக்க வேண்டும். இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றாகச் செல்ல வேண்டும்.

இன்று நீங்கள் இந்த நாட்டின் உரிமையாளர்கள். அதை மனதில் வைத்து, நீங்கள் அனைவரும் பெருமையுடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன், மேலும் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

# கிழக்கு ஆளுநர் இந்தியத் தூதருடன் சந்தித்துப் பேச்சு

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவை அவரது தூதரக அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்குத் தேவையான உதவிகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா அவர்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு தனது முழுமையான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தார்

# வட்டுக்கோட்டைப் பொலிஸார் தாக்கினர் பல்கலைக்கழக மாணவன் முறைப்பாடு

பொலிஸார் தன்னைத் தாக்கினர் என்று வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பல்கலைக்கழகமாணவன்மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த வட்டுக் கோட்டையைச் சேர்ந்த மற்றொரு இளைஞரான அலெக்ஸ் போன்றே தனக்கும் நடக்குமோ என்கிற அச்சம் காரணமாகவே தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டார் என்றும் அந்த இளைஞர் தெரிவித்தார்.

தனது உயிரை காப்பாற்றுமாறு இலங்கை மனித உரிமைஆணைக்குழுவில்பதிவு செய்த தனது முறைப்பாட்டில் கருணாகரன் நிதர்ஷன் கோரியுள்ளார்.

பொலிஸார் மறித்தபோது மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்ற குற்றச்சாட்டுக்காகவே தான் தாக்கப்பட்டார் என்று அந்த இளைஞர் தெரிவித்தார். மறித்தவர்கள் போக்குவரத்துப் பொலிஸார்இல்லைஎன்பதால் தான் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

''திடீரென அங்குவந்த சிவில்உடை தரித்த பொலிசார் வீதியில் வைத்து என்னைச் சரமாரியாகத் தாக்கினர். அவர்கள்என்னைத்தாக்கியதை காணொலியாகவும்எடுத்தேன். எனது தொலைபேசியினையும் பறித்தனர். என்னை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள அறை ஒன்றுக்கு கொண்டு சென்றனர்.

அறையினுள்எனது காலை விரித்து தலைகீழாகக் கட்டித் தூக்கி அடித்தனர். எனது தொலைபேசியில் உள்ள காணொலியை அழிப்பதற்காக தொலைபேசியின் கடவுச் சொல்லை கேட்டனர். நான்தர மறுத்தேன். தொடர்ச்சியாக என்னைத் தாக்கினர். போக்குவரத்து விதிகளைமீறியிருந்தால் எனக்கு தண்டம் விதியுங்கள். இல்லைநீதிமன்றம் அனுப்புங்கள் என கூறினேன். அதற்கும் அடித்தனர்.

இதனால் என்னால் சுவாசிக்கச் சிரமமாக இருந்தது. நான் மூச்சுத் திணறியதைப் பார்த்ததும்என்னை வெளியில் கொண்டு வந்து அமர்த்தினர். பொலிஸார் என்னை வீதியில் வைத்து அடித்தனர் என்ற செய்தி கேட்டு எனது தாயார் அப்போது அங்கே வருகை தந்தார்.

பொலிஸார் அங்கிருந்த அகன்றதும் நான் தப்பியோடி வந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டேன்"என்று தெரிவித்தார்.

இன்னுமொரு அலெக்சாக தன்னை வட்டுக் கோட்டை பொலிசார் கொன்றுவிடுவார்களோ என்ற பயத்திலேயே ஓடி வந்தார் என்றும்தனக்கு ஏதும்நடந்தால் வட்டுக்கோட்டை பொலிஸாரே முழுப் பொறுப்பும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவரது முறைப்பாடு தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் தரப்பிலிருந்து எந்தவிதக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை.

# மயோன் முஸ்தபா அபிவிருத்தி பிரிவு சாய்ந்தமருதில் அங்குரார்ப்பணம்





(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் எம்.எம். முஸ்தபாவின் (மயோன் முஸ்தபா) ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வரும் றிஸ்லி முஸ்தபா கல்வி மேம்பாட்டு மற்றும் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகருமான றிஸ்லி முஸ்தபாவின் அனுசரணையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அல்-ஜலால் வித்தியாலயத்தில் மர்ஹூம் மயோன் முஸ்தபா பல்லூடக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி மற்றும் சமூக அமைப்பின் ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை நினைவு கூரும் வகையில் தேசிய கொடி பிரதம அதிதியால் ஏற்றி வைக்கப்பட்டு மர்ஹூம் மயோன் முஸ்தபா பல்லூடக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் திறப்பு விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உப பரிசோதகர் ரவூப் விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் பிரதி அதிபர் டீ.கே.எம். சிராஜ், உதவி அதிபர் எம்.ஏ.எம். சிராஜ், பாடசாலை ஆசிரி யர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (05)

# 76 வயதைப் பூர்த்தி செய்த ஓய்வூதியர்கள் 76ஆவது சுதந்திர தினத்தில் கௌரவிப்பு

## காரைதீவு பிரதேச செயலாளரின் முன்மாதிரி





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது 76 வயதைப் பூர்த்தி செய்த ஓய்வூதியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலகத்தில் சிவில் ஓய்வூதியம் பெறும் இவ் வருடம் 76 வயதை பூர்த்தி செய்த ஓய்வூதியர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு காரைதீவு பிரதேச செயலகத்தில் நீண்டகாலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் சிலரும் அவர்களது வீடுகளுக்கு சென்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இது தவிர, அரசின் 'சுவதரணி' வேலை இந்தத் திட்டத்தின் கீழ் மூலிகை கன்றுகள் பல ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் நடப்பட்டதுடன் பல பயனதரும் மரங்கள் பிரதேசத்தில் நடப்பட்டன.

சுதந்திரதினத்தையொட்டி கடற்கரை சுத்தப்படுத்தல் சிரமதானமொன்று கடந்த வெள்ளியன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.(05)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு இன நல்லிணக்க செயலமர்வு

(பாறுக் ஷிஹான்)

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிழக்கு இளைஞர்கள் அமைப்பு, சி.ஈ.வை.எஸ்.டி., ஜே.ஜே பவுண்டேசன், நிறுவனங்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்த இளைஞர் யுவதிகளுக்கான

இண நல்லிணக்க செயலமர்வு அமைப்பின் தலைவர் தானீஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் சம்மாந்துறை சமாதான கற்கைகள் நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக ஐ.எல்.ஹாஸிக் கலந்து சிறப்பித்தார்.

பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மட் ஹனீபா உட்பட கௌரவ அதிதியாக சமாதான கற்கைகள் நிலையத்தில் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எல்.றியாஸூம் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் பல பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ் முஸ்லிம் இளைஞர் யுவதிகள் கலந்து சிறப்பித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைச்சர் கெஹலிய பதவியில் தொடர்வது நியாயமற்ற ஒன்றே

**சுற்றுலாத்துறைஅமைச்சர்கெஹலியரம்புக்வெல அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி கொ–ழும்பில் கையெழுத்துச் சேகரிக்கத் தொடங்கியுள்ளனர். உயிர் காப்பு மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் தர நிர்ணயத்தைக் கடைப்பிடிக்கத் தவறியதனால் தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் அமைச்சர் கெஹலிய தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார்.**

**கைது செய்யப்பட்ட பின்னரும் தனது அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலகாதைத் தொடர்ந்தே அவரைப் பதவி நீக்கும் கோரிக்கை எழுந்துள்ளது. அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அவர் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தபோது நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பானது. இது தொடர்பான குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து அவர் சுகாதாரத்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு சுற்றுலாத்துறை அமைச்சராக மாற்றப்பட்டார். எனவே தான் இப்போது பதவி நீங்கவேண்டிய தேவையில்லை என்று அவர் கருதக்கூடும். ஆனால், குற்றச்சாட்டுக்கு உள்ளாகி நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்ட பின்னரும் தனது பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பேன் என்று அமைச்சர் அடம்பிடிப்பது அரசியல் நாகரிகமல்ல.**

**இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் இதுவோரு சாபக்கேடு. குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகின்றபோதும், கைது செய்யப்பட்டபோதும் தமது பதவிகளில் நீடிப்பதன் மூலம் தாம் குற்ற மற்றவர்கள் என்று சாதிக்க முடியும் என்று அரசியல்வாதிகள் கருதுகின்றார்கள். லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு அப்பாற்பட்டவர்களாகத் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று எண்ணுவதற்குப் பதிலாக, குற்றச்சாட்டுக்களை அடுத்துப் பதவி விலகினால் அது குற்றங்களை ஏற்றுக்கொண்டுவிட்டதாகிவிடும் என்று எண்ணும் போக்கே அதிகம் காணப்படுவது துரதிர்ஸ்டமே.**

**பொதுத்–துறையில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்கூறல் கடமை மிக முக்கியமானது. அமைச்சர் கெஹலிய இப்போது சுகாதாரத்துறை அமைச்சராக இல்லாவிட்டாலும் அவர் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் தவறு நடந்துள்ளது என்று நிரூபிப்பதற்கானநம்பத்தகுந்தஆதாரங்கள்இருப்பதன் காரணமாகவே கைது செய்யப்பட்டார். எனவே அவர் தான் அமைச்சராக இருந்தபோது நிகழ்ந்த தவறு அல்லது மோடிக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியது தார்மீகக் கடமை. அந்தப் பொறுப்புக் கூறலில் இருந்து அவர் விலகுவது ஓர் அமைச்சராக மட்டுமல்ல அரசியல்வாதியாகவுமே இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதை நிரூபிக்கிறது.**

**அவராகப் பதவியிலிருந்து விலகாவிட்டால், அவரைப் பதவி நீக்கி ஆட்சிக் கட்டமைப்பின் மீது பொது மக்களுக்கு உள்ள நம்பிக்கையைக் காப்பாற்றவேண்டியது அரசுத் தலைவரதும் நாடாளுமன்றத்தினதும்கடமை. அமைச்சர்கெஹலிய மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து அவருக்கு ஆதரவளித்ததன் மூலம் தான் செய்த தவறுக்கு பிரயச்சித்தம் தேடிக்கொள்ளும் வகையில் இப்போதாவது நாடாளுமன்றம் அமைச்சரின் பதவி நீக்கலைத் துரித்தப்படுத்தவேண்டும். அதேபோன்று அரசுத்தலைவரும் தனது கடமையை இது விடயத்தில் பொறுப்புணர்வோடு ஆற்றவேண்டும்.**

# மக்களாட்சியில் அரசியல் அறியாமை

**பேராசிரியர் பழனித்துரை**



ஓர் உயர்நிலைக் கல்விக்கூட வகுப்பறையில் ஆசி ரியரைப் பார்த்து “மக்களாட்சி நடைபெறும் நாட்டில் எது பேராபத்து” என்று மாணவர் ஒருவர் கேட்டார். “அறியாமையில் வாழும் மனிதர்கள் மத்தியில் மக்க ளாட்சி தரும் வாய்ப்பைப் பயன்படுத்தி, ஆட்சிக் கட்டி லுக்கு அரசியல் அறியாமையுடன் அரசியல்வாதிகள் வருவதுதான் மக்களாட்சியில் மக்களுக்கு பேராபத்து” என்றார் ஆசிரியர். மாணவர் புரியவில்லை என்றார். ஆசிரியர் உடனே மக்களாட்சிக் கோட்பாட்டை விளக்கி யவர்களில் ஒருவரான ஜான் ஸ்டுவர்ட் மில் கூறியதை மிகவும் எளிமைப்படுத்தி ஒரு விளக்கத்தைத் தந்தார்.

“ஆளும் தரப்பு என்பது ஒரு பெரிய இயந்திரம். அதற்கு இயங்கு விதிகள் உண்டு. அதை இயக்க ஆற் றல் வேண்டும். அதை இயக்குவதுதான் ஆளுகை. அதுவே ஓர் அறிவியல். ஆகவேதான் அதனை அரச அறிவியல் என்கின்றனர். எனவே அந்த அறிவியல் தெரியாமல் ஆளும் தரப்பு என்ற இயந்திரத்தை இயக் கினால், அரசு என்ன விளைவினை ஏற்படுத்த வேண் டுமோ அதை உருவாக்காது” என்று விளக்கினார் ஆசிரியர்.

இந்தக் கருத்து ஆசிரியர் கருத்தல்ல, கோட்பாட்டா ளர்கள் கருத்து. இந்தக் கருத்தியலுக்கு எதிர்வினை யாற்றியவர்கள் இதனை நிராகரித்தனர். இந்தக் கருத்து முன்வைக்கப்படுவதன் நோக்கம், ஏழை எளி யவர்கள் படிக்காதவர்கள் மக்களாட்சி தரும் வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டை ஆளும் அதிகார மன்றங்களுக்கு, அதாவது நாடாளுமன்றம், மாகாண சபைகளுக்கு வந்துவிடக்கூடாது என்ற கருத்தியலால்தான் என்று வாதாடினர்.

யார் வேண்டுமானாலும் மக்களாட்சியில் எந்தப் பதவிக்கும் வரலாம் என்ற நிலை வந்தது. மக்களாட்சி தத்துவத்தில் தனித்துவச் சிந்தனை கொண்ட பெர்னாட் கிரிக் “இந்த இரண்டிலும் உண்மை இருக்கிறது” என்று கூறினார். இந்த நவீன மக்களாட்சியின் 250 ஆண்டுகால வரலாற்றைப் புரட்டும்போது மக்களாட்சி மலர்வதும், தளர்வதும் மங்குவதும் தொடர்ந்து எல்லா நாடுகளிலும் நடப்பதை நாம் பார்க்க முடியும். இதற்கு எந்த நாடும் விதிவிலக்கல்ல.

மக்களாட்சியின் பாதுகாவலன் என்று மார்தட்டும் அமெரிக்காவாகட்டும் அல்லது நாடாளுமன்றத்தின் தாய் என்று கூறிக்கொள்ளும் இங்கிலாந்தாகட்டும், உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என மக்கள் தொகையை வைத்துக் கூறிக்கொள்ளும் இந்தியாவாக இருக்கட்டும் எல்லா நாடுகளிலும் மக்களாட்சி வளர் வதும், தாழ்வதுமாகத்தான் இருக்கின்றது.

மக்களாட்சி மேம்படுவதற்கு மக்களாட்சியில் தொடர்ந்து சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தியவர் பெர்னாட் கிரிக். மக் களாட்சி தளர்கின்றபோது அதைத் தடுத்திட அறிவார்ந்த கருத்தியல்வாதமும் தொடர்ந்த நடுத்தட்டு மக்களின் அரசியல் போராட்டமும் தேவை என்றார் இந்தியா வின் தலைசிறந்த அரசியல் அறிஞர் ரஜினி கோத்தாரி.

சென்ற ஆண்டு இந்தியத் தலைநகர் டில்லியல் ஒரு கருத்தரங்கு நடந்தது. “கற்றலும் மாற்றமும்’ என்பது அதன் தலைப்பு. கற்றால் மட்டுமே மாற்றத்தைக் கொண்டுவர முடியும், அந்தக் கற்றல் என்பது கல்விக்கூடத்தில் நடைபெறுவது மட்டுமல்ல, ஒட்டு மொத்த சமூகத்தில் நடைபெறுவது. அந்த நிலைக்கு, கற்கும் ஆர்வம் கொண்டதாக சமூகத்தை தயாரித்திட வேண்டும். எனவே சமூகத் தயாரிப்பு என்பது மானுட மேம்பாட்டிற்கு அடிப்படை என்பதை அந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் வலியுறுத்தியது.

அடுத்து சமூகம் உருவாக்கிய அறிவை விரிவாக்கம் செய்திடல்வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் அறிவுத்திறனில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு ஒட்டுமொத்த சமூகமும் எல்லையற்ற ஏற்றத்தாழ்வைச் சந்திக்க வேண்டிவரும் என்பதனையும் அந்தக் கருத்தரங்கம் கவனப்படுத்தியது. இதில் ஒரு பிரிவு கருத்தாளர்கள் அரசியல், ஆளுகை என்பதை மையப்படுத்தி இன் றைய மக்களாட்சியின் தாழ்நிலை பற்றி விவாதித்த னர்.

குறிப்பாக இன்றைய வளர்ந்துவரும் பொருளாதாரம், அறிவியல் தொழில்நுட்பம் அனைத்தும் சமூகத்தில் உருவாக்கப்போகும் விளைவுகளை மேலாண்மை செய்யும் ஆற்றல் ஆட்சியாளர்களுக்கு வேண்டும். இல்லை எனில் அதனால் விளையும் பேராபத்தை சமூகம் எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதனையும் சுட்டிக்காட்டினர்.

இதனைப் புரிந்து கொண்டு அரசியல் கட்சிகள் குறைந்த பட்சம் மக்களாட்சி அரசியல் பற்றிய தெளிவை மக்களிடம் உருவாக்க வேண்டும். அது சமூகத்தில் அரசியல் நிகழ்வுகளை அரசியல் கட்சிகள் மட்டுமே நிகழ்த்தாமல், பொதுமக்களையும் பங்கேற்க வைத்து செயல்படும் ஓர் நிகழ்வாகும். இந்தப் புரிதல் ஆட்சியா ளர்களுக்கு வேண்டும் என்பதை மையப்படுத்தியது அந்த பன்னாட்டுக் கருத்தரங்கம்.

இந்தப் புரிதல் இல்லாத அரசியல்தான் இன்று உலகம் முழுவதும் நடைபெறுகின்றது என்பதை படம் பிடித்துக் காட்டினர் கருத்தாளர்கள். சமூகம் மாறுகிறது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அந்த மாற்றம் மிக வேகமாக நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொண்டு வினையாற்ற வேண்டும் மக்களை வழிநடத்தும் தலைவர்கள். அப்படி வழிநடத்தும் அரசியல் தலைவர்களுக்குத் தேவையான புரிதல், ஆற்றல், சக்தி, பார்வை இருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமான கேள்வி.

இந்தக் கேள்வி ஏன் எழுகின்றது என்றால், நாம் சந்திக்கும் மாற்றங்கள் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கையில் மேம்பாட்டை கொண்டுவரவில்லை என்ற காரணத்தால்தான். சந்தைப் பொருளாதாரம் உலகமயமானபோது மிகப்பெரிய எதிர்ப்பு உலகம் முழுவதும் எழுந்தது. இருந்தும் அந்தச் செயல்பாடு அமைதியாக முன்னெடுக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டது. அந்த நேரத்தில் உலக வங்கியில் பணி யாற்றிய பொருளாதார நிபுணர் ஜோசப் ஸ்டிக்லிஸ் ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்தார்.

அவர் நோபல் பரிசையும் பெற்றார். அவரது புத்த கங்கள் லட்சக்கணக்கில் விற்பனையாகின. உலகமயப் பொருளாதாரத்தால் வருகின்ற விளைவுகளால் ஏழை களின் வாழ்வில் ஏற்றம்பெறச் செய்ய முடியும், அதற்குத் தேவை ஆட்சியாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக் கும் ஒரு புதிய பார்வையும் திறனும்தான் என்று விளக்கினார். உலகம் முழுவதும் சென்று விளக்க உரையாற்றினார்.

தற்போது உலகமயப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தி முப்பது ஆண்டுகளைக் கடந்த நிலையில் உலகில் நடைபெற்ற பல ஆய்வுகள் கூறும் செய்தி ஒன்றுதான். இந்த உலகமயப் பொருளாதாரம் உலகம் முழுவதும் எல்லையற்ற பொருளாதார ஏற்றத்தாழ்வை சமூகத்தில் ஏற்படுத்திவிட்டது. இதன் விளைவாக மக்களாட்சியின் அடிநாதமாக விளங்கும் சமத்துவத் தையே கேள்விக்குறியாக்கிவிட்டது. இதை எப்படிப் புரிந்து கொள்வது என்பதுதான் கேள்வி.

ஒன்று உலகில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் உலகமயப் பொருளாதாரத்தின் வீச்சு என்ன என்பது பற்றிப் புரிந்துகொண்டு செயல்படவில்லை. இரண்டு, புரிதல் இருந்தும், உலக மயப் பொருளாதாரத்தை ஏழைகளுக்குச் செயல்பட வைக்கத் தேவையான ஆற்றல் ஆட்சியாளர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இல்லை. மூன்று மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி வாக்குகள் வாங்கி அதி காரத்திற்கு வரத் தெரிந்ததே தவிர ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் உலகமயப் பொருளாதாரத்தை மேலாண்மை செய்ய தவறி சந்தையின் போக்கில் ஆட்சியை விட்டுவிட்டார்கள்.

இந்த மூன்று கருத்தாக்கங்களிலும் உண்மை இருக்கிறது. இதில் மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் இந்தச் சூழலுக்கான ஒரு புதிய புரிதலை ஏற்படுத்திக் கொண்டு, இந்தச் சூழலை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மை பயக்கச் செய் யும் நிலைக்கு மேலாண்மை செய்யத் தேவையான ஆற்றலை வளர்த்துக் கொண்டு, மக்களிடம் ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்தி செயல்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பணி ஒரு கடினமான பணி. இந்தப் பணியை மேற்கொள்ள இயலாமல் ஆட்சியாளர்களும், அரசியல் வாதிகளும் சந்தையிடம் சன்மானம் பெற்று, அதை வைத்து தேர்தலைச் சந்தித்து பழகிக் கொண்டுவிட்ட னர். இதன் விளைவுதான் உலகமயமான ஊழல். இன்று உலக நாடுகளில் பெரும்பான்மையான தலை வர்கள் ஊழலில் சிக்கித் தவிக்கின்றனர். இந்த நிலை தான் உலகில் ஒரு பெரிய கதையாடலைக் கொண்டு வந்திருக்கிறது. அதுதான் ஊழல் மக்களாட்சியைப் பாழ்படுத்தும் கொடிய நோய், அதற்கு நாம் தீர்வு காண வேண்டும் என்ற கருத்தாக்கம்.

அதைத் திறமையாக திறன்படைத்த தலைவர்கள் முன்னெடுத்துச் சென்று மக்கள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வெற்றியும் பெற்று வருகின்றனர். அப்படி வெற்றி பெறுகின்ற தலைவர்களால் கட்சிகளால் தேர்தலில் ஊழலையும், ஊழலில் ஊறித்திளைத்த கட்சிகளையும் எதிர்கொள்வதில் பெரும் வெற்றியைப் பெறமுடியவில்லை. அதே நேரத்தில் இந்தக் கதை யாடலை வைத்து தேர்தல் வெற்றியைப் பெற முடி கின்றதேயன்றி, புதிய கருத்தாக்கத்தை அரசியலில் உருவாக்கி, அதை மக்களிடம் முன்னெடுத்துச் சென்று மக்களைத் தயார் செய்து உலகமயப் பொருளாதாரத் தால் விளைந்த விளைவுகளை மக்கள் தனதாக்கிக் கொள்ளும் சூழலை உருவாக்க இயலவில்லை.

அதற்குக் காரணம் சமூகம் அரசியல் அறிவுப் பஞ்சத்தில் சிக்கியுள்ளது. எனவே சமூகத்தை அறிவுப் பஞ்சத்திலிருந்து வெளியேற்ற நம் அரசியல் இன்றைய தேக்க நிலையிலிருந்து ஒரு புதிய தடத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இதற்குத் தேவை ஒரு புதிய சிந்தனைச் சூழல். இந்த சிந்தனைச் சூழல் என்பது ஓர் மக்கள் இயக்கமாக உருவாகிட வேண்டும். அதற்கு புதிய அரசியல் இயக்கங்கள் மக்கள் இயக்கங்கள் போல் கட்டமைக்கப்பட்டு மக்களுடன் நேரடித் தொடர்பினை உணர்வுபூர்வமாக ஏற்படுத்தி செயல்பட வேண்டும்.

ஊழலும் தாழ்நிலை அரசியலும் மக்களாட்சியை தாழ்த்துகின்றன. இதனை மாற்ற புதிய அரசியல் கட்ட மைக்கப்படல் வேண்டும். அது தேர்தல் அரசியலுடன் நிற்பதல்ல, அது மேம்பாட்டு மக்கள் அரசியல். அதை நோக்கிச் செல்லும். புதிய பாதைதான் இன்று நமக்குத் தேவை.

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் இடம் பெற்ற சுதந்திர தின நிகழ்வு







(வி.ரி. சகாதேவராசா)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் 76 ஆவது சுதந்திர தின விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இரா.முரளீஸ்வரனால் தேசியக் கொடி ஏற்றலுடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அணிவகுப்பு இடம்பெற்று தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

பணிப்பாளரால் சிறப்புரை வழங்கப்பட்டது.

தனது உரையில், வைத்தியசாலையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் இக்கட்டான நிலையில் சிறந்த முறையில் கடமையாற்றுவதைப் பாராட்டியதுடன் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளுக்கு திருப்தியான சிறந்த சேவையை வழங்குவதற்கு ஆலோசனையும் வழங்கியதோடு எந்நிலை வந்தாலும் அவற்றை வென்று சிறந்ததொரு வைத்திய சேவையை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் இதேபோன்று சிறந்த சேவைகளை நோயாளர்களுக்கு வழங்கி எமது பிரதேச வாழ் மக்களுக்கு மிகச் சிறந்த மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த சுதந்திர தினத்தில் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, தாதியபரிபாலகர் என்று. சசிதரன், தாதியபரிபாலகி திருமதி எல்.சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள், பிரதான சுகாதார முகாமைத்துவ உதவியாளர் திருமதி ரோஷி சுகுமார் மற்றும் விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள், பொறுப்பு உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், நிறைவுகான் தொழில் வல்லுனர் சேவை உத்தியோகத்தர்கள், குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள், விடுதி மேற்பார்வை உத்தியோகத்தர்கள், சிற்றூழிய மேற்பார்வையாளர்கள் மற்றும் சுகாதார உதவியாளர்களும், ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாற்சோறும் வழங்கி நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. (05)

### திறமைக்கான தேடல் விருது விழா:

# நாட்டின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த பலருக்கும் மதிப்பளிப்பு





லக்ஸ்டோ நெட்வொர்க் ஸ்ரீலங்காவின் 27 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற ‘திறமைக்கான தேடல் மகுடம் சூட்டும் விழா’ சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நிறுவனத் தலைவர் ஊடகர் அறிவிப்பாளர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலாநிதி ஏ.எல்.அன்சார் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் நாட்டின் நாலா பகுதிகளிலும் இருந்தும் ‘திறமைக்கான தேடல் விருதை பெறத் தகுதியான கலைஞர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன்போது கலைஞர்களின் கலை, இலக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் - மீஸான் பௌண்டேஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் எஸ்.எல்.எஸ். முஹீஸ், ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், கமுஃகமுஃ மல்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் நஸ்லின் ரிப்கா அன்சார், தொழிலதிபர் சிங்கர் எஸ்.எச்.எம். ஜிப்ரி, தொழிலதிபர் ஏ. ஆர். முகம்மது கியாஸ், லக்ஸ்டோ நெட்வேர்க் ஸ்ரீலங்காவின் அமைப்பாளர் கலாபூசனம் எம்.அருளம்பலம் உட்பட, கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கலை, கலாசார, ஊடக, சமூக சேவையில் சேவையாற்றி வரும் பல் துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கான உணவுப் பொருள்களும் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது.(05)

# சுதந்திர தினத்தில் விளையாட்டு விழா





(தில்சாத் பர்வீஸ்)

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 76 ஆவது சுதந்திர தின விழா ரோயல் மெட்ரிட் விளையாட்டு கழகத்தின் ஸ்தாபக தலைவர் ஏ. தானிஸ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் எமது நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்கள் மற்றும் ஏனையவர்காளுக்காக 2 நிமிட மௌன பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இன் நிகழ்வுக்கு சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் எம். டி.எம். ஜனோபர், ரோயல் மெட்ரிட் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஏ.ஆர்.எம். அஷ்ரிப், பொது நிர்வாகம் உறுப்பினர் எம்.டி.எம். ரிசா, முகாமைத்துவ சபை உறுப்பினர் எச்.எம். ஹாரிஸ், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க உறுப்பினருமான கே.ஆர்.எம். ரிசாட், எச்.எம்.எச். ஹோல்டிங் உரிமையாளர் சியாஸ், மாவட்ட விளையாட்டு அதிகாரி சப்ரி நிசார் என பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பிரதேசத்திலே போதை பொருள் முறியடிப்பு

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பெருமிதம்







(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் போதை பொருள் ஒழிப்பு மற்றும் முறியடிப்பு நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். எல் சம்சுதீன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு சமாதான நீதிபதிகள் சபை இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின வைபவத்தை சாய்ந்தமருதில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடியது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியபோது பொறுப்பதிகாரி சம்சுதீன் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் இலங்கையர்களாக எல்லோரும் செயற்பட்டு பெற்ற சுதந்திரத்தைதான் இன்று கொண்டாடி கொண்டிருக்கிறோம். இது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் சேர்ந்து பெற்ற சுதந்திரம்.

நாட்டுக்கு கிடைத்த சுதந்திரத்தை எல்லா மக்களும், எல்லா பிரதேசங்களும் அனுபவிக்க வேண்டும். நான் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடந்த இரு வருடங்களாக சேவையாற்றி வருகின்றேன். இப்பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரம் மற்றும் பாவனை அதிகமாகக் காணப்பட்டது.

பாரிய சவால்களுக்கு மத்தியில் நாம் இப்பிரதேசத்தில் போதை பொருள் ஒழிப்பு மற்று முறியடிப்பு நடவடிக்கைகளில் சாதித்துள்ளோம். சட்டம் அதன் கடமை செய்தது, அண்டிய இடங்களிலும் போதை பொருள் ஒழிப்பு மற்றும் முறியடிப்புகள் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டு வருகிறன. சமாதான நீதிபதிகளின் சேவைகள் மதிப்பானவை, மகத்தானவை. நீதியாகவும், நேர்மையாகவும் சமாதான நீதிபதிகள் சமூகத்தின் கௌரவ பிரஜைகள். சமூகத்துக்கு உச்ச பட்ச சேவைகளை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.(05)



# சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற வளாகத்தில் மர நடுகை திட்டம்

(பாறுக் ஷிஹான்)

76 ஆவது சுதந்திர தின விழா நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது குவாஷி நீதிமன்ற வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது தேசியக் கொடியை குவாஷி நீதிமன்ற நீதிபதி அஹமட் லெப்பை ஆதம்பாவா ஏற்றி வைத்தார்.

இந்நாட்டின் சுபீட்சத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் இந்நாட்டு மக்கள் ஐக்கியப்பட்டு வாழவேண்டும் என்பதற்காகவும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் இந் நிகழ்வில் ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் கீழ் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்கள் மற்றும் ஏனையவர்களுக்காக 2 நிமிட மௌன பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மௌலவி ஏ.எம் நவாஸ் துஆ பிரார்த்தனை மேற்கொண்டார்.இந்நிகழ் வில் குவாஷி நீதிமன்ற நிர்வாகச் செயலாளர் எஸ்.ஜமால்டீன் குவாஷி நீதிமன்ற நியாய சகாயர்களும் சாய்ந்தமருது பிரதேச செயலக உளவளத்துறையின் உத்தியோகத்தர் பாத்திமா சியானாஈ சாய்ந்தமருது ஜூம்மா பள்ளி வாசல் நம் பிக்கையாளர் சபை உறுப்பினரும் ஓய்வு பெற்ற நீர்பாசன உத்தியோகத்தருமான ஏ.எம் றஸீட், பதிவாளரும் சமாதான நீதவானுமாகிய எம்.எஸ்.றவூசுக், பதிவாளர் எம்.ஐ உதுமாலெப்பை மற்றும் குவாஷி நீதிமன்ற காரியல உதவியாளர் எஸ்.எல் ரசீட் மற்றும் உதவியாளர்களான ஏ.டபிள்யூ.எப் சரோபா ,ஏ.எம்.எப் சஸ் ரீன் ,ஏ.எம்.எப்.சுஹா ,எப்.எப்.அஹானி, ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.(05)




# காணி உரிமைப் பத்திரங்கள் கல்முனையிலேயே அதிகம்




(பாறுக் ஷிஹான்)

இலங்கையில் அதிகூடிய உறுதிகள் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை காணி பதிவகத்தில் 1500 பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவிற்கமைய 20 லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் இயங்கும் கல்முனை காணி பதிவகமும் மாவட்ட பதிவகத்திலும் இரவு பகல் பாராது உத்தியோகத்தர்கள் கடமையாற்றினர். இலங்கையில் அதிகூடிய உறுதிகள் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை காணி பதிவகத்தில் 1500 பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை முதல் இரவு பகலாக செயற்படும் இப்பிரிவானது உருமய தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை துரிதகதியில் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உருமய வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றப்பட்டு அவற்றைப் பயன்டுத்திய விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட நிறுவ-னங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடத்தல் பொறிமுறையை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் ‘உருமய’ தேசிய செயற்பாட்டு செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மானியப் பத்திரங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பதிவு செய்வதற்கும் உருமய தேசிய செயற்பாட்டுச் செயலக அலுவலகத்தை 0114354600-1 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் இலத்திரனியல் படிவத்தின் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக் கருவிற்கமைய, ‘உரித்து’ வேலைத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

குறித்த காணி உறுதிப் பத்திரங்கள் தற்போதும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ. ஹேரத் தெரிவித்தார்

உரித்து’ வேலைத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 10 ஆயிரம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைப்பதற்கான தேசிய நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் பெப்ரவரி 05ஆம் திகதி ரங்கிரி தம்புள்ளை விளையாட்டரங்களில் நடைபெற்றது.

நிகழ்வில் பங்குபற்றும் 10,000 பேருக்கான போக்குவரத்து மற்றும் உணவு ஆகியவற்றை வழங்குவதற்கு அவசியமான நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் எவ்வித நெருக்கடியும் இன்றி நிகழ்வில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

‘உரித்து’ வேலைத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதோடு, அதற்காக வரவு செலவுத் திட்டத்திலும் 2 பில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி உறுதிகள் அனைத்தும் முழு உரிமையுள்ள காணிஉறுதிப் பத்திரங்களாக மாற்றப்படும்.

காலணித்துவ ஆட்சியில் வெளிநாட்டவர்கள் இலங்கையில் கையகப்படுத்திய காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்காக உள்நாட்டவர்களுக்கு அனுமதி பத்திரங்கள் ஊடாக வழங்கியிருந்தனர்.

இருப்பினும் 1935ஆம் ஆண்டில் காணி கட்டளைச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டவர்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்காக மற்றுமொரு அனு மதி பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் கீழ் காணிகளில் விவசாயம் செய்வதற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்குமான அனுமதிகள் வழங்கப்பட்டன.(05)

# வியாங்கல்லை கிறீன் லைன் வி. கழக உதைபந்தாட்ட இறுதிசுற்றுப் போட்டி

## ‘களுத்துறை வுளூாஸ்’ அணி சம்பியன்



(எஸ்.அஷ்ரப்கான்,ஏ.எம். அஜாத்கான்)

வியாங்கல்லை கிறீன் லைன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட அணிக்கு 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அன்மையில் வியாங்கல்லை மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியிலே களுத்துறை வுளூாஸ் அணியினரை எதிர்த்து கொழும்பு ஸ்மாஸ் அணி மோதியது.

இதில் 2:1 என்ற கோல் வித்தியாசத்தில் களுத்துறை வுளூாஸ் அணி சம்பியனாகத் தெரிவானது.

சம்பியன் அணிக்கு இரண்டு லட்சம் ரூபா பணப்பரிசும் கிறீன் லைன் வெற்றிக் கிண்ணமும், 2 ஆம் இடத்தைப் பெற்ற அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப் பரிசும் கிண்ணமும் வழங்கப்பட்டன.

மேலும் இந்த தொடரின் அதிகூடிய கோல்களை பெற்ற வீரருக்கு பத்தாயிரம் ரூபாயும் கிண்ணமும், சிறந்த கோல்காப்பாளருக்கு பத்தாயிரம் ரூபாயும் கிண்ணமும் ஒழுக்கமான அணிக்கு ஐயாயிரம் ரூபாயும் முறையே வழங்கப்பட்டன.

இறுதி நாள் நிகழ்வுகள் கிறீன் லைன் விளையாட்டுக் கழகத்தின் தவிசாளர், லெப்டினன் ஏ.எம்.எம்.கியாஸின் முழுமையான வழி நடத்தலுடன் அவரது தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக டாக்டர் எம்.எச்.எம். நூமி, கௌரவ அதிதிகளாக அல்-ஹாஜ் எம்.எஸ். எம்.ஜெஸ்லான், முன்னாள் மேல் மாகாணசபை உறுப்







பினர் அல்-ஹாஜ் இப்திகார் ஜெமீல் மற்றும் கிறீன் லைன் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரர்கள், ஊரின் தனவந்தர்கள், ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# நாடங்காய் விலை எகிறல்!



(பாறுக் ஷிஹான்)

சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் ஒரு கிலோ நாடங்காயின் சில்லறை விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், சம்மாந்துறை, பகுதிகளில் நாடங்காயின் விற்பனை ஏட்டிக்கு போட்டியாக எந்தவொரு விலை நிர்ணயம் இன்றி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேலும் இக்காலப்பகுதியில் நாடங்காய் அறுவடை கிடைக்காததாலும் ஏனைய வகை மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாலும் நாடங்காயின் விலை அதிகரித்துள்ளதாக மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக ஒரு கிலோ முருங்கைக்காயின் விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

எனினும் அம்பாறை மாவட்டத்தின் குறிப்பிட்ட சில இடங்களில் முழு நாடங்காய் 150 முதல் 300 வரை விற்பனை செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.(05)

# லஞ்ச, ஊழல் தொடர்பில் கைதானவர்களில் பொலிஸ் திணைக்களத்தினரே அதிகமாம்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த வருடம் இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 3,431 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகளுக்காக கைது செய்யப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் பொலிஸ் அதிகாரிகள் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 2,789 முறைப்பாடுகள் விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறை மாவட்ட ஆசிரியர் இடமாற்றங்களை ரத்துச் செய்ய ஜனாதிபதியின் செயலர் பணிப்பு

## ஹரீஸ் எம்.பியின் முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கை



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அண்மையில் வெளியான ஆசிரிய இடமாற்ற பட்டியலில் உள்ள அதிருப்தி நிலை தொடர்பில் கலந்துரையாட திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது அம்பாறை மாவட்ட கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் போன்ற கல்வி வலயங்களிலிருந்து வினைத்திறன் மிக்க 400 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் முறையான பதிலீடுகளின்றி ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதால் அம்பாறை மாவட்ட கல்வி பின்னோக்கி செல்லும் அபாயம் உள்ளதுடன் மாணவர்களின் கல்விநிலை சீரழியும் ஆபத்தும் உள்ளதை ஜனாதிபதி செயலாளருக்கு விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ், இந்த இடமாற்றத்தை ரத்துசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது விடயமாக கிழக்கு மாகாண பிரதம செயலாளரை தொடர்பு கொண்டு இந்த இடமாற்றத்தை ரத்து செய்ய தேவையான மேலதிக நடவடிக்கையை எடுக்குமாறு பணிப்புரை விடுத்ததுடன் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் இன்று(செவ்வாய்க்கிழமை) தனக்கு தெரியப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். மேலும் இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை தொடர்புகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இந்த இடமாற்ற விடயம் தொடர்பில் முழுமையாக விளக்கியத்துடன் மாணவர்களின் கல்வி அடைவுகளைக் கவனத்தில் கொண்டு இடமாற்றத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். மேலும் ஜனாதிபதி செயலாளரும் ஆளுநருக்கு இந்த இடமாற்றத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் தொடர்பில் விளக்கியுள்ளார்.(05)

# வாக்குறுதியை நிறைவேற்றினார் ரணில் மாணவர்களுக்கு புதிய இசைக் கருவிகள்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய மாணவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றும் வகையில் பெறுமதிவாய்ந்த இசைக்கருவிகள் பாடசாலைக்கு பெப்ரவரி 09 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கடந்த நவம்பர் 03 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பயணித்த உலங்குவானூர்தி மோசமான காலநிலை காரணமாக மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய மைதானத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இதன்போது குறித்த மாணவர்களால் தங்களின் பாடசாலைக்கு இசைக் கருவிகள் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

தங்கள் பாடசாலைக்கு திடீரென வருகை தந்த விருந்தினர் நாட்டின் ஜனாதிபதி என்பதை அறிந்து கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். அந்த சமயத்தில் உலங்குவானூர்திக்கு அருகில் வந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சிநேகபூர்வ உரையாடலில் மாணவர்கள் ஈடுபட்டனர். பாடசாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குறைபாடுகள் குறித்தும் ஜனாதிபதி அவர்களிடம் கேட்டறிந்தார்.

பாடசாலையில் இசைக்கருவிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதன்படி, மிகக் குறுகிய காலத்தில், அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, டிரம்பெட், டிராம்போன், சாக்ஸபோன், கிளாரினெட், மவுண்டபிள் டெம்பரின் உள்ளிட்ட இசைக்கருவிகள் பரிசளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதி சமூக அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஞ்ஜித் கீர்த்தி தென்னகோன், வலயக் கல்விப் பணிப்பாளர் கே. ஜே. சுசில் விஜேதிலக, வலயக் கல்விப் பணிப்பாளர் எச். டி.தர்மசிறி, மொனராகலை புதுருவகல மகா வித்தியாலய அதிபர் எச். எம். யு. திரு.பி.ஹேரத், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்க உள்ளனர்.(05)







# பள்ளிவாசலில் சுதந்திர தினம்







(அஹ்ஸன் அப்தர்)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவத்தகம பிரதேச சபைக்குட்பட்ட பரகஹதெனிய பிரதேசத்திலுள்ள ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசலில் விசேட தேசிய கொடியேற்றும் நிகழ்வு பள்ளிவாசல் தலைவர் எம்.எம். ஜெஸ்மின் றஹ்மானி தலைமையில் பள்ளிவாசல் வளாகத்தில் இடம்பெற்றது.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கையை மீட்டெடுத்த வெற்றியை கொண்டாடும் சுதந்திர வீரர்களை நினைவூட்டும் வகையில் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. தேசிய கொடியினை உப தலைவர் ஏ.டபிள்யு. அன்வர் கியாசிம் ஏற்றி வைத்தார். அத்துடன் இந்த சுதந்திர தின நிகழ்வின் நினைவாக பள்ளிவாசல் வளாகத்தில் மூன்று மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்த நிகழ்வின் போது ஜாமி உல் அன்வர் பெரிய பள்ளிவாசல் சுமார் ஆறு நூற்றாண்டு கால நீண்ட வரலாறு கொண்ட பள்ளிவாசல் என்பதை பள்ளிவாசலின் செயலாளர் இர்ஷாட் நினைவூட்டினார். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பரகஹதெனியவின் கிராம உத்தியோகத்தர் பிரியதர்ஷினி பெரேரா பள்ளிவாசலின் செயற்பாடுகள் குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் பள்ளிவாசலின் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த சுதந்திர தின நிகழ்வில் மாவத்தகம பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் ஏ.எம்.எம். ஸால்தீன், பரகஹதெனிய கிராம உத்தியோகத்தர் பிரியதர்ஷினி பெரேரா உட்பட பல்வேறு முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (05)

# தொடர் காய்ச்சலினால் முல்லைத்தீவு பெண் சாவு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியை சேர்ந்த அன்ரன் அனிஸ்ரலஸ் (வயது - 53) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 29ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# படுகொலையாளி கெஹலியவுக்கு வழங்கும் தண்டனை அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கையாக அமையட்டும்

## ஜனக ரத்நாயக்க கோரிக்கை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவின் இம்யுனோகுளோபுளின் மோசடி ஒரு படு கொலை நடவடிக்கை என பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜனகரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சருக்கு எதிராக சுமத் தப்பட்டுள்ள தரம்குறைந்த இம்யுனோகுளோபுளினை இறக்குமதி செய்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் படு கொலையில் ஈடுபட்டுள்ளார் எனகருதவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் மருந்துகளை இறக்குமதிசெய்துள்ளதுடன் நாட்டின் அப்பாவி மக்களிற்கு அவற்றை வழங்கியுள்ளார் என ஜனகரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எத்தனை பேர் இதன்காரணமாக உயிரிழந்தனர் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆகவே இந்த விவ காரம் குறித்து நாங்கள் மேலும் ஆராயவேண்டும் இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரின் படுகொலை கள் போன்றது இது எனக் கருதவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிட்லரும் விசஊசியை செலுத்தி மக்களை கொன் றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கெஹலியவிற்கு வழங்கப்படும் தண்டனை இலங்கையில் அரசியல்வாதி யொருவருக்கு வழங்கப்படும் மிகச்சிறந்த தண்டனையாக இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாது நோய் அறிகுறிகளை பரிசோதிப்பதற்காக தடுப்புமருந்து களை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



பொதுவாக அரசியல்வாதிகள் மோசடி ஊழலில் ஈடு படுவது குறித்து வெட்கப்படுவதில்லை சிறைக்கு சென்ற பின்னரே அவர்கள் நோய்அறிகுறிகளை வெளிப்படுத்து வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## புதிய அதிபர்களுக்கு நிலைப்படுத்தல் கடிதம் சம்மாந்துறையில் வழங்கல்





( வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய புதிய அதிபர்களுக்கான பாட சாலை நிலைப்படுத்தல் கடிதம் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. இலங்கை அதிபர் சேவைதரம் 03 இற் கான போட்டிப் பரீட்சை கடந்த 2019 நடைபெற்றது.

இதற்கானநேர்முகப்பரீட்சை கடந்த 2023 இல் நடை பெற்று அதிபர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

பயிற்சிக்கு பின்னர் பாடசாலை வழங்கும் பணி தற்போது இடம் பெற்றது. (05)

## ஐ.நா. அலுவலகம் முன்பாக போராட்டம் காஷ்மீர் விடுதலை அமைப்பு நடத்தியது










காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் காஷ்மீர் ஒற்றுமை தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்திற்கு முன் னால் நேற்று (திங்கட்கிழமை) பதாதைகளை ஏந்திக் கொண்டு காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பினர் கவ னவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும் ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் தமது பதாதைகளில் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இந்த விடயத்தில் தலையிட்டு இரு நாடு களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைக்க வேண்டும்.

சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீ ரிகளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்திற்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன் காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப காஷ்மீர் பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதை வலியுறுத்துவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஏழு தசாப்தங்களாக ஆக்கிரமிப்புப் படை கள் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு மற்றும் காஷ்மீரில் செய்த மனித உரிமை மீறல்களைக் கண்டித்த அவர்கள் காஷ்மீர் மக்களின் விருப்பத் திற்கு ஏற்ப காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதி செய்ய உலக நாடுகளும் கடமைப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் கொழும்பு நகரசபை முன்னாள் உறுப்பினர்களான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான், எஸ்.எம். முஸம்மில் உட்பட பலரும் கலந்து கொண்டு மகஜர்களையும் கையளித்தனர். (05)

## பிரபல இசையமைப்பாளர் யுவன் இலங்கை வருகை!



பிரபல இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா இலங்கையில் பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ள நிலையில், அதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மாலை 06.00 மணிக்கு கொழும்பு தாமரைக் கோபுரத்தில் உள்ள மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிலையில், யுவன் சங்கர் ராஜாவை காணாவி ரும்பி ரசிகர்கள் நேற்று மாலை 5 மணிக்கு கொழும்பு தாமரைக் கோபுர முன்றிலில் படையெடுத்தமை குறிப் பிடத்தக்கது. (05)

# பொது நூலகங்களின் முக்கியத்துவமும் வரலாறும்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை, பெப். 06

திருகோணமலை நகராட்சி மன்றம், திருகோணமல பட்டினமும் சூழலும் பிரதேசசபை பொதுநூலகங்களின் நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள், நூலக உத்தியோகத்தர்கள் அவர்களின் குடும்பத்தினர் இணைந்து ஞாயிற்றுக்கிழமை நிலாவெளி குச்ச வெளி கும்புறுப்பிட்டி ஆகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிடும் முகமாக சுற்றுலா சென்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2024 இல் வெளியிடப்பெற்றது.